RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2228

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் அசுணம்: பறவையா? விலங்கா? ஒரு மீள் பார்வை

பி. பாலசுப்பிரமணியன் [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# A Retrospective View of Asunam in Sangam Literature: The Animal or Bird?

**P. Balasubramanian [a, *]**

[a] PG Research Department of Tamil, Sacred Heart College, Tirupattur–635601, Tamil Nadu, India.

* Corresponding Author: uyirneyan@gmail.com

Received: 17-01-2022
Revised: 14-03-2022
Accepted: 26-03-2022
Published: 01-04-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature is celebrated as the traditional literature of Tamil. Contemporary scholars are re-reading the Sangam literature from a new perspective over time. Sangam literature can be called a biodiversity volume when it comes to ecological thinking. The creators of the Sangam period have identified the land-based creatures of his time in poetry. Numerous of them became extinct over time or have been renamed. In particular, the article discusses the search for a creature called Asunam that has been spoken of in Sangam poems, the poetic record, and the commentary of the narrators.

**Keywords:** Tamil Poetry, Sangam Period, Ecology, Environment, Asunam

## முன்னுரை

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற தொல்காப்பியர் கூற்றுப்படித் தமிழில் பயன்பாட்டில் இருக்கக்கூடிய அனைத்துச் சொற்களும் பொருளுடையனவைகளாகும். பொருளில்லாத சொற்கள் என்று எவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அந்தந்தக் காலத்திற்கேற்றவாறு சொற்கள் பயன்பாட்டில் இருந்தமையையும் அறிய முடிகிறது. செய்யுள் வழக்குச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் எனச் சொற்களைப் பிரித்துப் பார்க்கிறோம். குறிப்பாக, சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அக்கால வழக்கில் இருந்த சொற்களாகும். கால மாற்றத்தால் பல சொற்கள் வழக்கிழந்தன. இன்றைய காலகட்டத்திற்கு அச்சொற்களையும் சொற்கள் உணர்த்தும் பொருளையும் நினைவுபடுத்தவேண்டிய தேவையிருக்கிறது. அதனடிப்படையில் ‘அசுணம்’ என்ற சொல்லின் பொருளை விளக்கும் நோக்கில் கட்டுரை அமைகிறது.

## அசுணம் - பதிவுகள்

நற்றிணையில் 244, 304 ஆகிய இரண்டு பாடல்களிலும் அகநானூற்றில் 88ஆம் பாடலிலும் அசுணம் என்ற சொல் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனச் சங்க இலக்கியச் சொல்லடைவை (Madhaiyan, 2007) உருவாக்கிய பெ. மாதையனும் சங்க இலக்கியச் சொற்றொகை உருவாக்கிய தாமஸ் லெமனும் தாமஸ் மால்டரும் கூறியுள்ளனர் (Thomas Lehmann and Thomas Malten, 1993). மூன்று பாடல்களில் மட்டுமே அசுணம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது என்பது இவர்களின் கருத்து. மேலும் கலித்தொகை 143 ஆம் பாடலில் ‘மானை’ என்ற சொல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மான் என்பதை அசுணமா எனக் குறிப்பிடுகின்றார். இவரைப் பின்பற்றியே பிற்கால உரையாசிரியர்களும் பதிவு செய்திருப்பது ஆய்வுக்குரியதாகும். ஆக, அசுணம் என்ற சொல் நேரடியாக இடம்பெற்றுள்ள பாடல்கள் 3

மட்டுமே. வேறு பாடல்களில் 'மான்' என்பது அசுணமா என்று உரையாசிரியர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? என ஆராய வேண்டும்.

## நற்றிணை

அசுணம் என்பது ஓர் உயிரினம். ஆனால் அது பறவையா? விலங்கா? என்பதில் உரையாசிரியர்களுக்கிடையே பல்வேறு கருத்துநிலைகள் உண்டு. நற்றிணையில் இரண்டு பாடல்கள் அசுணம் பற்றிப் பேசுகின்றன.

"விழுந்த கூதளத்து அலறிநாறும்

மாதர் வண்டின் நயவரும் தீம்குரல்

மணம் நாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்

உயர்மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ..."

என்ற பாடலில் (கூற்றங்குமரனாரின் குறிஞ்சி நிலப்பாடல்) 'அசுணம்' இடம்பெற்றுள்ளது (Balasubramanian, 2004). மழை பெய்து ஓய்ந்த பின் குளிர்ச்சியான சாரல் பொழியும் கூதிர்க் காலத்தில் 'கூதளம்' மலரும். கூதளத்தில் தேனருந்தி மணம் வீசும் வண்டின் இசை, கேட்பதற்கு இனிமையாக இருக்கும். வண்டினிசையை யாழோசை எனக் கருதி, மணம் வீசும் மலைப்பிளவில் தங்கியிருக்கும் 'அசுணப் பறவை' செவிகொடுத்துக் கேட்கும் என்று இப்பாடல் பதிவிடுகிறது.

இப்பாடலின் உரைவிளக்கம், 'இசையைக் கேட்டு மகிழும் இயல்புடைய பறவை; கொடூரமான இசையைக் கேட்டால் உயிர்விடும் என்பர். இதனை விலங்கு என்றும் கூறுவர்' என்று குறிப்பிடுகிறது (Balasubramanian, 2004).

உரையாசிரியர், 'கூதள மலரில் தேனுண்ட அதன் மணத்தையுடைய வண்டின் இசையை, யாழிசை என்று அசுணம் செவி கொடுத்துக் கேட்டு ஆராயும் என்றது தலைவனுடன் முயங்கியதால் தலைவி கொண்ட வேறுபாட்டைக் காணும் தாய், முருகணங்கியதால் வந்த வேறுபாடு என்று ஆராயும் என்பதனை உள்ளுறுத்தி நின்றது' என்கிறார் (Balasubramanian, 2004).

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், 'விருப்பமுறும் இனிய ஓசையை யாழோசை போலுமென்று மலைமுழையிலிருக்கின்ற அசுணமாகிய விலங்கு செவி கொடுத்துக் கேளாநிற்கும்' என்று எழுதுகிறார் (Narayanaswamy, 1967).

"அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும்

இன்பமும் துன்பமும் உடைத்தே

தண் கமழ் நறுந்தார் விறலோன் மார்பே"

என்ற பாடல் மாறோக்கத்து நப்பசலையாரின் குறிஞ்சி நிலப்பாடலாகும் (Balasubramanian, 2004). குளிர்ச்சி பொருந்திய நறுமணம் வீசக்கூடிய மாலை அணிந்த, வல்லமையுடைய தலைவனின் மார்பு இன்பமும் துன்பமும் உடையது. அதாவது, தலைவிக்குத் தலைவனின் மார்பு புணர்ச்சியில் இன்பமும் பிரிவில் துன்பமும் தருவதாகும். அதுபோல, அசுணப்பறவைகளைக் கொல்பவர்களின் கை முதலில் யாழிசைத்து இன்பத்தையும் பிறகு பறை இசைத்து அதற்குத் துன்பத்தையும் கொடுக்கும் என அறியலாம். அதனால், அசுணப் பறவையைக் கொல்பவர்களுடைய கையைப் போன்றது என உரையாசிரியர் விவரித்துக் கூறுகிறார்.

பாடல் உரை விளக்கம், 'தலைவன் தன்னொடு இருப்பின் தன் எழில் பொலியுமென்றும் தலைவன் பிரியின் கெடுமென்றும் கூறுகின்றனள் தலைவி. அசுணப் புள்ளைக் கொல்பவர் முதலில் யாழை இசைத்துப் பின் பறையை முழக்குவர். இன்னா ஓசை கேட்டு அசுணம் மடியும்' என்று குறிப்பிடுகிறது (Balasubramanian, 2004).

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், "தண்ணிய தாய்மணங்கமழும் நறிய மாலையணிந்த வலிமையுடைய நம் காதலன் மார்பானது; இசையறி விலங்காகிய அசுண மானைக் கொல்பவருடைய கையைப் போலப் பெரிதும் இன்பமும் துன்பமும் உடையதாயிரா நின்றது" எனக் கூறி (Narayanaswamy, 1967), மேலும் "அசுணங் கொல்பவர் முதலில் யாழை வாசித்துப் பின்பு செவியில் ஏற்க வொண்ணாத பறையை முழக்கி அவற்றைக் கொல்வதனால் இன்பமுந் துன்பமும் உடைமையின் அதனை உவமித்தார்" என்று விளக்கிச் செல்கிறார் (Narayanaswamy, 1967).

இங்கு அசுணம் என்பது இசை கேட்கும், கேட்டு ஆராயும் ஒரு வகைப் பறவை, அசுணமானாகிய விலங்கு எனவும் அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும் அசுணப் பறவையைக் கொல்ல நினைப்பவர்கள் முதலில் யாழிசைத்து மயங்கச் செய்து, பிறகு, பறை முழக்கிக் கொல்வர் என்ற செய்தியை முன்வைக்கிறது.

## அகநானூறு

அகநானூற்றில் பல உயிரினங்கள் பேசப்பட்டாலும் அசுணம் என்ற ஓர் உயிரினம் ஒரு பாடலில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருப்பது வியப்புக்குரியதாகும். ஒருவேளை தொகைப்பாடல்கள் பாடிய காலத்தில் இந்த உயிரினம் அரிதாக வாழ்ந்ததாக இருந்திருக்கலாம்.

"…. ….. குன்றத்

திரும்புவலி தொலைத்த பெருங்கை யானைக்

கவுள்மலி பிழிதரும் காமல் கடாவும்

இருஞ்சிறைத் தொழுகி யார்ப்ப யாழ்செத்

திருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும்"

என்ற பாடல் (ஈழத்துப் பூதந்தேவனார், குறிஞ்சி நிலப்பாடல்) 'அசுணம் ஓர்க்கும்' எனப் பதிவு செய்கிறது (Venkatasamy, Venkatachalam Pillai, 1961).

'குன்றின் கண்ணுள்ள பெரிய புலியைக் கொன்ற பெரிய கையினை உடைய யானையின் கன்னத்திலிருந்து பெருகி வழியும் அழகிய மதநீரில், கரிய சிறகினையுடைய வண்டின் கூட்டம் ஒலிக்க அதனை யாழிசை எனக் கருதி பெரிய மலையின் பிளப்பாய குகையிலுள்ள அசுணங்கள் உற்றுக் கேட்கும்' என்று இருவரும் தங்களது விளக்கவுரையில் குறிப்பிடுவர் (Venkatasamy, Venkatachalam Pillai, 1961).

இங்கும் அசுணம் வண்டின் ஓசையை, யாழிசை எனக் கருதி மயங்கும் என்ற பொருளிலேயே கையாளப்படுகிறது. அசுணம் என்பதை 'அசுணங்கள்' என்று உரையாசிரியர்கள் பன்மையில் எழுதிச் செல்வதைப் பார்க்க முடிகிறது.

மேற்கண்ட மூன்று பாடல்களும் குறிஞ்சித் திணையைச் சார்ந்தவை. ஆக, அசுணம் என்ற பறவை (அ) விலங்கு குறிஞ்சித் திணைக்குரியதாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

## கலித்தொகை

நற்றிணையும் அகநானூறும் அசுணத்தைக் குறிஞ்சி நில உயிரினம் என அடையாளப்படுத்தின. கலித்தொகையில் அசுணம் 143 ஆம் நெய்தற்கலிப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சற்று முரணாக உள்ளது. குறிஞ்சி தவிர பிற நிலங்களிலும் அசுணம் பரவியிருக்க இடமுண்டா? என்று ஆய்வு நிகழ்த்தவும் வாய்ப்பிருக்கிறது.

"மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா

தறைகொன்று மற்றதன் ஆருயி ரெஞ்சப்

பறையறைந் தாங்கொருவன் நீத்தான்"

என்ற பாடலுக்கு (நல்லந்துவன் பாடல்) உரையெழுதிய நச்சினார்க்கினியர் (Natchinarkkiniyar,1943),

‘வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்ப முற்றதென்று அருள் பண்ணாதே முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதன் அரிய உயிர்போம்படி பறையைத் தட்டினாற்போலே ஒருவன் முன்னர் வஞ்சித்து இன்பத்தை உண்டாக்கிப் பின்னர் அவ்வின்பம் போம்படி என்னைக் கைவிட்டான்’ என்று குறிப்பிடுகிறார் (Natchinarkkiniyar,1943).

உரையாசிரியர் விசுவநாதன், ‘வஞ்சனையாலே தான்மீட்டிய யாழிசையைக் கேட்ட அசுணமாவை, இவ்வின்பம் உற்றதென்று அருள் செய்யாமல், முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னர் அதன் அரிய உயிர் போகும்படிப் பறையைத் தட்டினார் போல ஒருவன் முன்னர் வஞ்சித்து, இன்பத்தைத் தந்து பின்னர் அவ்வின்பம் போம்படி என்னைக் கைவிட்டான்’ என்று குறிப்பிடுகிறார் (Viswanathan, 2004).

நச்சினார்க்கினியர் கூறிய அதே விளக்கத்தைப் பொருள் மாறாமல் பிற்கால உரையாசிரியராகிய விசுவநாதனும் பயன்படுத்தியுள்ளார். சில வார்த்தைகளை மட்டுமே மாற்றியுள்ளார். கலித்தொகைப் பாடலும் யாழ், பறை வாசித்து அசுணமாவை வஞ்சனையாகக் கொள்கின்றனர் என்ற கருத்தியலை முன்வைக்கிறது. அருஞ்சொற் பொருள் விளக்கத்திலும் மான் என்பதற்கு அசுணமா என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதையும் அறிய முடிகிறது. பாடலில் யாழ்கேட்ட மானை என்ற சொல்லும் பறையறைந்து என்ற சொல்லும் இடம்பெற்றிருப்பதால் உரையாசிரியர்கள் அசுணமா என்ற பொருளில் அர்த்தப்படுத்தியிருப்பார்கள் எனக் கருத இடமிருக்கிறது.

‘அசுணம் - இது பேடையை விட்டு நீங்காத பறவை. இதனிறம், உருவம் முதலியவை நன்றாக விளங்கவில்லை. இதன் ஓசையை தலைவனீக்கத்தில் தலைவி பொறாமைக்குத் தமிழ் நூலார் உவமை கூறுவர்’ என அபிதான சிந்தாமணியில் ஆ. சிங்காரவேலு முதலியார் குறிப்பிடுவார் (Singaravelu Mudaliyar, 2001).

‘அசுணமா, அசுணம் என்பதற்குக் கேகயப்புள்’ எனப் பொருள் விளக்கம் தருகிறது (Kadhiraiver Pillai, 1981). ந. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி.

“அசுணம், பழந்தமிழிலக்கியங்களால் அறியப்படும் உயிரினங்களுள் ஒன்று. இது ஒருவகை விலங்கு என்றும் பறவை என்றும் கூறப்படுகிறது. இதனைக் குறிப்பிடுங்கால், ‘அசுணம் என்பது விலங்குகளுள் ஒன்று என்று பலவிடத்தும், பறவைகளுள் ஒன்றென்று சிலவிடத்தும் குறிக்கப்படுகிறது. இதற்கு, யாழ் ஒலி (குழல் ஒலி, வண்டொலி, பாட்டொலி) முதலிய மெல்லிசையால் இன்புறுதல் முதலியனவும், பறையொலி (முரசொலி, வெடியொலி) முதலிய வல்லிசையால் துன்புறுதல் முதலியனவும் இயல்பு. இதனைக் குறிஞ்சி நிலத்துக்குரியதென்றும், புகை போன்ற மேனி உடையதென்றும், அச்சப் பொருள்களுள் ஒன்றென்றும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தனுள் ஓசையில் ஈடுபட்டு உயிரையும் இழப்பது’ என்றும் இ.வை. அனந்தராமையர் விளக்கிக் கூறியுள்ளார். அசுணம் பற்றிய இவ்வியல்புகள், நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, நான்மணிக்கடிகை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், கூர்மபுராணம், காஞ்சிப் புராணம், பாகவதம் முதலிய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களில் அசுணம் இன்னோசை கேட்டு இன்புறுவதும் வல்லோசை கேட்டுத் துன்புறுவதும் ஆகிய பண்பே, பெரும்பாலும் உவமை வாயிலாகவும் பிற வாயிலாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பிடிக்க விரும்புவோர், இது வாழும் காட்டகத்தே சென்று, முதலில் இனிய யாழிசையை இசைப்பர். அதன் இசையில் மயங்கி நிற்கும் நிலையில் வலிய பறையினை முழக்குவர். அவ்வல்லோசையால் துன்புற்று விழும்போது பிடித்துக் கொள்வர். வண்டுகள் மலைச்சாரலில் இமிர்கின்ற இன்னொலியினை அசுணம் யாழோசை எனக் கேட்டின்புறும் செய்தியினை நற்றிணையும் (244) அகநானூறும் (88) கூறுகின்றன. தலைவிக்கு இன்பமும் துன்பமும் உண்டாக்கும் தலைவன் மார்பினுக்கு, இனிய ஒலியையும் வலிய ஒலியையும் அடுத்தடுத்து உண்டாக்கி அசுணத்தைக் கொல்பவர்களின் கை உவமையாகக் கூறப்பட்டுள்ளது (நற்.304). தான் இசைக்கும் யாழோசையைக் கேட்டு இன்புற்றிருக்கும் அசுணத்தின் இன்னுயிர் நீங்குமாறு, அதனைப் பிடிப்போர் பறை முழக்கும் செய்தி கலித்தொகையில் (143) இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களிலேயன்றிச் சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களிலும் குறிப்பிடப்படும் அசுணம் இக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இது காலத்தால் அழிந்துபட்ட உயிரினங்களுள் ஒன்றாகும். இன்னிசையால் மகிழ்ந்தின்புற்ற நிலையில்

எழுப்பப்படும் வல்லோசை கேட்டுத் துன்புற்று உயிர்விடும் இந்த இயல்பே, சங்க காலத்தில் உவமையாகக் கூறி விளக்கும் அளவு மக்களால் அறியப் பெற்றிருந்த இந்த உயிரினம், பின்னர் முற்றிலும் அழிந்து போனதற்குக் காரணமாதல் கூடும்" என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது. இதுகாறும் அசுணம் என்ற சொல் பயன்பாடு குறித்து அறிஞர்களிடையே இருந்த கருத்தொற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

சங்கப் பாடல்கள் உருவாக்க காலத்தில் எண்ணற்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பல சொற்கள் இன்று வழக்கொழிந்து போயின எனலாம். மீதமுள்ள சொற்களைச் சமகாலத்தில் அடையாளப்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது. சங்கப் பாடல்களில் எண்ணற்ற பறவைகளும் விலங்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் அசுணம் என்பது பறவையா? விலங்கா? என அறிய முடியவில்லை. அசுணம் என்று நேரடியாக நற்றிணையில் 2 பாடல்களும் அகநானூற்றில் ஒன்றுமாக மூன்று பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையே சொல்லடைவுகளும் குறிப்பிடுகின்றன. கலித்தொகை 143 ஆம் பாடலில் மானை என்ற சொல்லை அசுணமா என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சொல்லடைவுகள் இந்தச் செய்தியைப் பதிவு செய்யவில்லை. இது ஆய்வுக்குரியதாகும். வாழ்வியற் களஞ்சியம் சங்க இலக்கியம் தாண்டிப் பிற்கால இலக்கியங்களிலும் அசுணம் குறித்தப் பதிவுகள் உள்ளன என்கிறது. மேலும் தற்காலத்தில் இந்த உயிரினம் இல்லை எனவும் குறிப்பிடுகிறது. அசுணம் பற்றிப் பாடலாசிரியர்களும் உரையாசிரியர்களும் குறிப்பிடும் செய்திகள் பொதுவானவைகளாகும். யாழிசையை ஆழ்ந்து கவனிக்கும் பறவையிது. இதனைக் கொல்ல வேண்டுமென்றால் யாழிசைத்துப் பறைமுழக்க வேண்டும் என்பதாகும். உரைகளில் இது விலங்கு என்றும் பறவை என்றும் எழுதப்பட்டுள்ளன. இதுகாறும், எண்ணற்ற உயிரினங்களைத் தமிழ்ச் சமூகம் தொலைத்திருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது. இயற்கையின் அதீதமான படைப்புகளுள் ஒன்றாக அசுணம் இருந்திருக்கிறது. சங்ககாலப் படைப்பாளிகள் தாம் வாழ்ந்த நிலம் சார் உயிரினங்களைக் கவிதைகளில் பாடியிருந்ததால் காலங்கடந்தும் தொலைந்து போன உயிரினங்கள் குறித்து சொற்கள் வழி இன்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சமகாலப் படைப்பாளிகளிடம் வாழ்நிலை சார்ந்த முதற், கரு, உரிப்பொருள்கள் படைப்புகளில் இடம்பெற வேண்டும் என்ற சிந்தனை மேலெழுகிறது. திணையியல், சூழலியல் சார்ந்து கலை, இலக்கியங்கள் பெரிதும் உருவாக வேண்டும் என்பதை நமக்குச் சங்க இலக்கியமும் சங்க இலக்கியச் சொற்களும் உணர்த்தி நிற்கின்றன.

## References


Balasubramanian, K, V., (2004) Nattrinai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Balasundaram, S., (2012) Tholkappiyam Sollathikaram, Periyar University, Salem, India.

Kadhiraiver Pillai, N., (1981) Tamil Mozhi Agarathi, Asian Educational Services, Delhi, India.

Madhaiyan, P., (2007) Sanga Ilakkiyac Sollataivu, Tamil University, Thanjavur, India.

Narayanaswamy, (1967) Natrinai Nanuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Natchinarkkiniyar, (1943) Kalithogai Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Singaravelu Mudaliyar, A., (1981) Abithana Sinthamani, Asian Educational Services, Delhi, India.

Thomas Lehmann And Thomas Malten, (1993) A Word Index for Cankam Literature, Institute of Asian Studies, Chemmancherry, Chennai, India.

Venkatasamy Nattar, N, M., Venkatachalam Pillai, R., (1961) Agananooru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Viswanathan, A., (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License